செ.வெ.எண்:-05/2020 நாள்:06.06.2020

## திண்டுக்கல் மாவட்டம்

# 2612 பயனாளிகளுக்கு 11.36 கோடி ரூபாய் மதிப்பில் பயன்பெறக் கூடிய வகையில் கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பு செயல்படுத்தப்பட உள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், ஊரக தொழில்களை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் வருமானத்தை பெருக்குதல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டத்தில் ஏழு (ஆத்தூர், வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம், பழனி, கொடைக்கானல், வேடசந்தூர் மற்றும் குஜிலியம்பாறை) வட்டாரங்களைச் சார்ந்த 148 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் திட்ட ஊராட்சிகளில் சுய உதவிக் குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் குடும்பங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளில் (FPO) உள்ள உறுப்பினர்கள் தங்கள் தொழில்களின் மூலம் வளமும், வலிமையும் பெறுவதற்காகவும், பிற பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்களுக்கு புதிதாக தொழில் துவங்கிடவும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் ரூ.300 கோடியில் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.05.2020 அன்று துவக்கி வைக்கபட்டது. அந்த சிறப்பு நிதி உதவித் தொகுப்பின் மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் 11.36 கோடி ரூபாய் மதிப்பில் 2612 பயனாளிகள் பயன்பெறக் கூடிய வகையில் கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பு செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1184 நபர்களுக்கு, நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.50,000/- என்ற அடிப்படையில் மொத்த 5.92 கோடி ரூபாய் நீண்ட கால தனிநபர் தொழில் கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்கப்படும்.

60 உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 900 நபர்கள் பயன்பெறும் வகையில் ஒருமுறை மூலதன மானியமாக குழு ஒன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 0.90 கோடி ரூபாய் வழங்கப்படும்.

குழு ஒன்றுக்கு 5 பயனாளிகள் அடங்கிய 14 தொழில் குழுக்களுக்கு (ஆடை தயாரிப்பு, பால் பொருட்கள் உற்பத்தி, கலைப் பொருட்கள் உற்பத்தி போன்றவை) தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 21 இலட்சம் ரூபாய் ஒருமுறை மூலதன மானியமாக வழங்கப்படும்.

ஒரு உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு/உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு 300 நபர்கள் வீதம் பயனாளிகள் பயன்பெறும் வகையில் உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு தலா 10 இலட்சம் ரூபாய் என 30 இலட்சம் ரூபாய் மூலதன மானியமாக வழங்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள், விதவைகள், திருநங்கைகள், ஆதரவற்றோர் உள்ளிட்ட நலிவுற்றோரின் தொழில் மேம்பாட்டிற்காக நபர்களை தேர்தெடுத்து தொழில் மூலதன நிதியாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தனிநபர் ஒருவருக்கு அதிபட்சமாக ரூ.20,000/- என்ற அடிப்படையில் நிதி வழங்குவதற்காக மொத்தம் 2.36 கோடி ரூபாய் நீண்ட கால கடனாக வழங்கப்படும்.

புலம் பெயர்ந்து மீண்டும் செந்த ஊர் திரும்பி வந்த திறன்பெற்றவர்களில் வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 1.67 கோடி ரூபாய் நீண்ட கால கடனாக வழங்கப்படும்.

மேற்கண்ட பயன்களைப் பெற வட்டாரங்களுக்கு உட்பட்ட ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் மாவட்ட ஊரகப் புத்தாக்கத் திட்டம், திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத்திட்ட அலுவலகம், 1வது மாடி பூமாலை வணிக வளாகம், கோபால சமுத்திரம், கீழக்குக்கரை, அரசு தலைமை மருத்துவமனை பின்புறம், திண்டுக்கல். என்ற முகவரியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட அலுவலகம் அல்லது 0451-2900094 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---